# கிராம ஊராட்சி அளவில் நீர் வள மேலாண்மை

## பயிற்சி கையேடு

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு அரசு
மறைமலைநகர் - 603209.

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | நீர் மேலாண்மை | 1 |
| 2. | தமிழரின் பராம்பரிய நீர் மேலாண்மை | 9 |
| 3. | நீர் மேலாண்மையின் தற்போதைய நிலை | 43 |
| 4. | நீர் ஆதாரங்களை மேலாண்மை செய்வதில்<br>ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறையின் பங்கு | 67 |
| 5. | நமக்காக - நாட்டுக்காக - நாளைக்காக | 79 |
| 6. | மழை நீர் சேகரிப்பு | 91 |
| 7. | நீர் வடிமுகடு மேலாண்மை | 99 |
| 8. | குடிமராமத்து திட்டம் | 111 |
| 9. | ஜல்சக்தி அபியான் திட்டம் | 115 |

# முகவுரை

மனித வாழ்க்கைக்கு மட்டுமின்றி கால்நடைகள் வேளாண் பணிகள் மற்றும் இதர தேவைகளுக்கும் நீர் அவசியமான ஒன்று என்பது நாம் அனைவரும் அறிந்ததே. மனிதனின் தவறான செயல்பாடுகளால் இயற்கைக்கு எதிரான விளைவுகள் ஏற்பட்டு பருவமழை பொய்ப்பதும், காலம் தவறி பொழிவதும், பருவமழை பரவலாக பெய்யாமல் ஒரு சில இடங்களில் குறுகிய கால கூட்டத்தில் மிக கன மழையாகப் பொழிந்து இழப்பை ஏற்படுத்துவதும் வாடிக்கையாகிவிட்டது. மறுபுறம் தொடர்ந்து சில ஆண்டுகள் மழை பொழிவின்றி கடும் வறட்சியை சமாளிக்க வேண்டிய நிலையும் உருவாகிறது.

இந்த நிலையை சரி செய்து, பெய்யும் மழையை சீர்மிகு நிலையில் சேமித்து கிடைக்கும் நீரை முறையாக மேலாண்மை செய்தால், அதிக பலன்களை மனித குலம் தொடர்ந்து பெறமுடியும். இப்பொருள் குறித்த புரிதல் என்பது ஒவ்வொரு தனிமனிதனுக்கும் ஏற்படுத்தப்படல் வேண்டும். நாளைய சந்ததியினர் தொடர்ந்து நிம்மதியாக இந்த பூமியில் வாழ வேண்டுமெனில் நம் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட கவனமும், சிந்தனையும் செயல்பாடுகளும் நீர் மேலாண்மையை நோக்கியே இருக்க வேண்டும். தனி மனிதன் என்ற நிலையைத் தாண்டி ஒரு கிராமமாக ஒன்றிணைந்து திட்டமிடுவது, எங்கிருந்து ஆரம்பிப்பது என்னென்ன நடவடிக்கைகள் எடுப்பது போன்றவையே இப்போது நம்முடைய குறிக்கோள்களாக இருக்க முடியும்.

இத்தகைய நோக்கத்தில் மத்திய மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. இப்பொருள் குறித்து முறையான விழிப்புணர்வை கிராம மக்களிடையே ஏற்படுத்த RGSA திட்டத்தின் கீழ் பல்வேறு பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த கையேட்டினை தயாரிக்க பல இணைய தளங்களிலிருந்து நிறுவனங்கள் மற்றும் வல்லுநர்களின் கருத்துருக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

இயற்கையோடு இணைந்த முறையில் கிராம ஊராட்சி அளவில் நீர் மேலாண்மைப் பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க இந்த கையேடு மிகவும் உறுதியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.